## மல்லிகை வகைகள்

1.மொக்கு துளைப்பான், ஹென்டிகாசிஸ் டூபளிஃபெசியாலிஸ்

சேதத்தின் அறிகுறிகள்

- புழு மொக்குகளைத் துளைத்து சாப்பிடும்.
- தாக்கப்பட்ட மொக்குகள் இலேசான மெல்லிய நூலாம்படையில் பின்னப்பட்டிருக்கும்.

பூச்சியின் விபரம்

- புழு பச்சையாக கருந்தலையுடன் இருக்கும்.
- அந்துப்பூச்சி, வெண்ணிற அந்துப்பூச்சி, வெள்ளை இறக்கையில் பழுப்பு நிறக்கோடுகளுடன் காணப்படும்.

கட்டுப்படுத்தும் முறைகள்

- தாக்கப்பட்ட மொக்குகளை புழுக்களுடன் சேகரித்து அழிக்கவும்.
- விளக்குப்பொறி அமைத்து அந்துப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம்.
- வேப்பங்கொட்டை வடிநீர் 5 சதம் தெளிக்கலாம்.
- 1 லிட்டர் தண்ணீரில 2 மிலி எண்டோசல்ஃபான் (அ) மாலத்தியான் தெளிக்கலாம்.
- செடிகளை சீரான கவாத்து செய்து, தோட்டத்தை சுத்தமாக வைத்துக் கொள்ளவும்.

2. பிணைக்கும் புழு, எலாஸ்மோபால்பஸ் ஜாஸ்மினோஃபேகஸ்

சேதத்தின் அறிகுறிகள்

- புழு பூ மொக்குகளைத் துளைத்து சேதப்படுத்தும்.
- இளந்துளிர்களும், பூ மொக்குகளும் சேர்ந்து பின்னப்பட்டிருக்கும்.
- மேலும் புழுக்களின் கழிவுப்பொருள்களும் அவற்றின் மேல் இருக்கும்.

பூச்சியின் விபரம்

புழு : பச்சை நிறமாகவும், சிவப்புத் தலையுடன் உடலின் பக்கவாட்டில் பழுப்பு நிறக்கோடுகளுடன் இருக்கும்.

அந்துப்பூச்சி : சிறியதாகவும், சாம்பல் நிறத்துடனும் இருக்கும்.

கட்டுப்படுத்தும் முறைகள்

- தாக்கப்பட்ட மொக்குகளை புழுக்களுடன் சேகரித்து அழிக்கவும்.
- விளக்குப்பொறி அமைத்து அந்துப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம்.
- வேப்பங்கொட்டை வடிநீர் 5 சதம் தெளிக்கலாம்.
- 1 லிட்டர் தண்ணீரில 2 மிலி எண்டோசல்ஃபான் (அ) மாலத்தியான் தெளிக்கலாம்.
- செடிகளை சீரான கவாத்து செய்து, தோட்டத்தை சுத்தமாக வைத்துக் கொள்ளவும்.

3. சிவப்பு பயிர்ச்சிலந்தி, டெடரானைக்கஸ் சின்னாபரினஸ்

சேதத்தின் அறிகுறிகள்

- சிலந்திகள் இலையின் அடிப்பரப்பிலிருந்து நூலாம்படையினை உருவாக்கி அதனுள்ளிருந்து சாப்பிடும்.
- இலையின் மேற்பரப்பில் மஞ்சள் நிறப்புள்ளிகள் இருக்கும் பிறகு சிவப்பாக மாறிவிடும்.
- தாக்கப்பட்ட இலைகள் வாடிவிடும்.
- பூக்களில் உருவாவது குறைந்துவிடும்.

பூச்சியின் விபரம்

- வெண்ணிற கோள வடிவ முட்டை இலையின் அடிப்பரப்பில் காணப்படும்.
- சிலந்தி சிவப்பு நிறத்தில் இருக்கும்.

கட்டுப்படுத்தும் முறைகள்

- தாக்கப்பட்ட செடிகளை சேகரித்து அழிக்கவும்.
- 1 லிட்டர் தண்ணீரில் 1.5 மிலி டைக்கோஃபால் (அ) 2 கிராம் நனையும் கந்தகத்தூள் அல்லது 2 மிலி எண்டோசல்ஃபான் கலந்து தெளிக்கவும்.

7. கண்ணாடி இறக்கை நாவாய்ப்பூச்சி, கோரித்யூமா ஐயேரி

சேதத்தின் அறிகுறிகள்

- இப்பூச்சி சிம்பா மல்லிகை வகைகளில் காணப்படும்.
- இலைச்சாற்றை உறிஞ்சி சேதப்படுத்தும்.
- தாக்கப்பட்ட இலைகள் மஞ்சளாக மறி காய்ந்து உதிர்ந்துவிடும்.

பூச்சியின் விபரம்

- கண்ணாடி போன்ற இறக்கையுடையது.

கட்டுப்படுத்தும் முறைகள்

- தாக்கப்பட்ட இலைகள் மற்றும் செடியின் பாகங்களை சேகரித்து அழிக்கலாம்.
- 1 லிட்டர் தண்ணீரில் 2 மிலி டைமீதோயேட் (அ) மீதைல் டிமேட்டான் கலந்து தெளிக்கலாம்.
- 5 சதம் வேப்பம் கொட்டை வடிநீர் தெளிக்கலாம்.

3. இலைச்சேர்க்கும் புழு, நோசினோ ஜீயாமிட்ராலிஸ்

சேதத்தின் அறிகுறிகள்

- புழுக்கள், இலைகளையும், கிளைகளையும் ஒன்றாக பிணைத்துவிடும்.
- பிணைக்கப்பட்ட இலைகளை அரித்துத் தின்பதால் அவை சல்லடைபோல் ஆகியிருக்கும்.

பூச்சியின் விபரம்

புழு : பச்சையாகவும். மெல்லிய மயர்கற்றைகளுடனும், மார்புப் பகுதியில் கருப்புக் கோடுகளுடனும் இருக்கும்.

அந்துப்பூச்சி : இளம் பழுப்பு இறக்கையில் வெள்ளைப்புள்ளிகளுடன் இருக்கும்.

கட்டுப்படுத்தும் முறைகள்

- தாக்கப்பட்ட மொக்குகளை புழுக்களுடன் சேகரித்து அழிக்கவும்.

- விளக்குப்பொறி அமைத்து அந்துப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம்.
- வேப்பங்கொட்டை வடிநீர் 5 சதம் தெளிக்கலாம்.
- 1 லிட்டர் தண்ணீரில 2 மிலி எண்டோசல்ஃபான் (அ) மாலத்தியான் தெளிக்கலாம்.
- செடிகளை சீரான கவாத்து செய்து, தோட்டத்தை சுத்தமாக வைத்துக் கொள்ளவும்.

4. இலைச்சுருட்டுப்புழு, க்ளைஃபோடஸ் யூனியோனாலிஸ்

சேதத்தின் அறிகுறிகள்

- இலைகள் சுருட்டப்பட்டு அதனுள்ளிருந்து புழு இலைகளைச் சாப்பிடும்.

பூச்சியின் விபரம்

புழு : பச்சை நிறமாக இருக்கும்.

அந்துப்பூச்சி : வெண்ணிற இறக்கையில் பழுப்பு நிறக்கோடுகளுடன் இருக்கும்.

கட்டுப்படுத்தும் முறைகள்

- மொக்குப் புழுவில் உள்ளதை இணைக்கவும்.

5. வெண்பட்டுச் சிலந்தி, அசீரிய ஜேஸ்மினி

சேதத்தின் அறிகுறிகள்

- மல்லிகையின் துளிர் இலைகளின் மேற்பரப்பில் கண்ணிற்குப் புலப்படாத மிக நுண்ணிய பயிர்ச் சிலந்திகள்

வெண்பட்டுப்போன்ற திட்டுத் திட்டான வளர்ச்சிக்கான உண்டாக்கி இலைகளைச் சுருங்க செய்து காய்ந்து உதிரும்படி செய்யும்.

பூச்சியின் விபரம்

- பெண் சிலந்தி கோள வடிவமானது

கட்டுப்படுத்தும் முறைகள்

- தாக்கப்பட்ட செடிகளை சேகரித்து அழிக்கலாம்.
- 1 லிட்டர் தண்ணீரில் 3 மிலி டைக்கோஃபால் அல்லது 5 கிராம் நனையும் கந்தகத்தூள் கலந்து தெளிக்கலாம்.

8. வெள்ளை ஈ, டைஅலிரோட்ஸ் கிர்கால்டியை

சேதத்தின் அறிகுறிகள்

- இலையின் அடியிலிருந்து சாற்றை உறிஞ்சி சேதப்படுத்தும்.
- தாக்கப்பட்ட இலைகள் மஞ்சளாக மாறிவிடும்.

கட்டுப்படுத்தும் முறைகள்

- கண்ணாடி இறக்கைப்பூச்சியில் உள்ளதை இணைக்கவும்.

9. மல்லிகை நாவாய் இறக்கைப்பூச்சி, ஆன்டிஸ்டியா கருசியேட்டா

சேதத்தின் அறிகுறிகள்

- இளந்தளிர் மற்றும் மொட்டுக்களிலிருந்து சாற்றை உறிஞ்சும்.
- பூ உருவாவது பாதிக்கப்படும்.

பூச்சியின் விபரம்

இளம்குஞ்சு : கரும்பழுப்பு நிறமானது

**நாவாய்ப்பூச்சி :** கரும்பழுப்பு நிறமானது கேடயம் போன்ற வடிவமுடையது. ஆரஞ்சு மற்றும் வெண்ணிறக் கோடுகள் காணப்படும்.

**கட்டுப்படுத்தும் முறைகள்**

- 1 லிட்டர் தண்ணீரில் 2 மிலி மானோகுரோட்டோஃபாஸ் கலந்து தெளிக்கவும்.

**10. பூப்பேன், த்ரிப்ஸ் ஓரியென்டாலிஸ்**

**சேதத்தின் அறிகுறிகள்**

- பூக்களின் இதழ்களில் பழுப்பு நிறக்கோடுகளை ஏற்படுத்தும்.

**பூச்சியின் விபரம்**

**இளங்குஞ்சு :** மஞ்சளாக இருக்கும்.

**பூச்சி :** கருப்பாக இருக்கும்.

**கட்டுப்படுத்தும் முறைகள்**

- தாக்கப்பட்ட இலைகள் மற்றும் செடியின் பாகங்களை சேகரித்து அழிக்கலாம்.
- 1 லிட்டர் தண்ணீரில் 2 மிலி டைமீதோயேட் (அ) மீதைல் டிமேட்டான் கலந்து தெளிக்கலாம்.
- 5 சதம் வேப்பம் கொட்டை வடிநீர் தெளிக்கலாம்.